**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 87/2018**

நாள் 23.09.2025

DW1 – ராமாத்தாள்

க/பெ – வையாபுரி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of September 2025)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் தாக்கல் செய்துள்ள 19.07.2013–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 5–வது பக்கத்தில் எனது பாக சாசன பத்திரமும், நான் எழுதிய உயில் சாசனமும் தொலைந்து விட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரம் காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் விபரமும் எனக்குத் தெரியாது. அவிநாசி காவல் நிலையத்திற்கு எதிரே 3–ம் பிரதிவாதி ருக்குமணியின் ஹோட்டல் கடை உள்ளது என்றால் சரிதான். நான் 19.07.2013–ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வா.சா.ஆ.8–ன் **அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் தற்போது நீதிமன்றம் உத்தரவிட்டதின் பேரில் பி.வா.சா.ஆ.6** ஆக தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சண்முகம் மற்றும் சண்முகத்திற்கு தெரிந்த இன்னொரு நபரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த சண்முகம் 3–ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். மற்றொரு சாட்சி யார் என்று எனக்கு தெரியாது.

2. அம்மாசி கவுண்டர் யார் பெயரில் உயில் எழுதி வைத்தார் என்று எனக்குத் தெரியாது. 17.12.2012—ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த **வா.சா.ஆ.9—ன் அசல் கிரைய பத்திரத்தை நான் தற்போது பி.வா.சா.ஆ.7** ஆக தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றிருந்தேன். 17.12.2012—ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த **அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நான் தற்போது பி.வா.சா.ஆ.8** ஆக தாக்கல் செய்கிறேன். இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எழுதி வாங்குபவர் என்ற இடத்தில் நானும் கைரேகை வைத்துள்ளேன் என்றால் சரிதான், அதில் சாட்சியாக ஜெகதீஸ் மற்றும் மாணிக்கம் ஆகிய இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் எனது மூத்த மகன் மூர்த்தி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். வேட்டுவபாளையம் கிராமத்தில் உள்ள சொத்து மற்றும் தொட்டம்பாளையத்தில் உள்ள சொத்து தவிர, எனது அப்பாவிற்கு பாகம் பிரிக்க வேண்டிய சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா ஆவணம் எழுதி வைக்கும் நிலையில் இல்லை என்றும், நானும், எனது தங்கை ருக்குமணியும் சேர்ந்து ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு தனிப்பட்ட முறையில் சொத்தை எங்களுக்கு எழுதி வைக்க எனது அப்பாவிற்கு உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் நான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால

சரியல்ல. எனது தம்பியான 2—ம் பிரதிவாதியுடன் நான் தற்பாது பேசுவதில்லை. ஆனால், எல்லோரும் சேர்ந்து தான் ஒன்றாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால், வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வேட்டுவபாளையம் கிராமத்தில் உள்ள சொத்து விவசாயம் செய்யாமல் தரிசாக தான் இருந்து வருகிறது. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :—** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.23 14:21:36 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**